முல்லைப் பெரியாறு அணையில் மத்திய துணைக் குழுவினர் ஆய்வு

கம்பம், நவ. 2: முல்லைப் பெரியாறு அணை பகுதியில், மத்திய கண்காணிப்பு துணைக் குழுவினர் செவ்வாய்க்கிழமை ஆய்வு நடத்தினர்.

முல்லைப் பெரியாறு அணையில், மத்திய நீர்வள ஆணையச் செயற்பொறியாளரும், துணைக் குழு தலைவருமான சரவணக்குமார் தலைமையில் ஆய்வு நடத்தப்பட்டது. இதில், தமிழக அரசின் பிரதிநிதிகளான பெரியாறு அணை சிறப்புக் கோட்டச் செயற்பொறியாளர் சாம் இர்வின், உதவிப் பொறியாளர் டி. குமார் மற்றும் கேரள அரசின் பிரதிநிதிகளான கட்டப்பனை கோட்ட நீர்ப்பாசனத் துறை செயற்பொறியாளர் ஹரிகுமார், உதவிப் பொறியாளர் பிரசீத் ஆகியோர் ஈடுபட்டனர்.

அப்போது, பிரதான அணை, பேபி அணை, மண் அணை, இடுக்கி மாவட்டத்துக்குச் செல்லும் உபரி நீர் வெளியேற்றம், நீர்க் கசிவு அளவு, நீர்மட்டம் அளவீடு செய்யும் கருவிகள் போன்றவற்றை ஆய்வு செய்தனர்.

மேலும், அணையில் நடைபெறவேண்டிய பராமரிப்புப் பணிகள் குறித்தும் ஆலோசனை நடத்தினர். இது குறித்து பெரியாறு அணை பொறியாளர் ஒருவர் கூறுகையில், பருவகால மாறுபாடுகளால் அணையின் பாதுகாப்பை உறுதி செய்வது மற்றும் நீர்வரத்து, நீர் வெளியேற்றம் ஆகியவற்றை மத்திய துணைக் குழுவினர் ஆய்வு செய்தனர் என்றார். இதற்கு முன், ஆகஸ்ட் 17-இல் துணைக் குழுவினர் முல்லைப் பெரியாறு அணையில் ஆய்வு நடத்தினர்.



முல்லைப் பெரியாறு அணையில் செவ்வாய்க்கிழமை மத்திய கண்காணிப்பு துணைக் குழு தலைவர் சரவணகுமார் தலைமையில் பிரதான அணையைப் பார்வையிட்ட குழுவினர்.

உபரி நீர் வெளியேற்றம் குறைப்பு

முல்லைப் பெரியாறு அணையிலிருந்து கேரள மாநிலம் இடுக்கி மாவட்டத்துக்கு, அக்டோபர் 29-ஆம் தேதி விநாடிக்கு 514 கனஅடி தண்ணீர் 2 மதகுகள் வழியாக திறந்துவிடப்பட்டது. அக்டோபர் 30-இல் 6 மதகுகள் திறக்கப்பட்டு, விநாடிக்கு 2,974 கன அடி தண்ணீர் வெளியேற்றப்பட்டது. இந்நிலையில், செவ்வாய்க்கிழமை 3 மதகுகள் அடைக்கப்பட்டு, விநாடிக்கு 1,014 கன அடி தண்ணீர் மட்டுமே வெளியேற்றப்படுகிறது.

அணை நிலவரம்

அணையின் நீர்மட்டம் - 138.20 அடியாகவும், (மொத்த உயரம் - 142 அடி), நீர் இருப்பு 6,672 மில்லியன் கன அடியாகவும், நீர்வரத்து விநாடிக்கு, 3,952 கன அடியாகவும், அணையிலிருந்து தமிழகப் பகுதிக்கு நீர் வெளியேற்றம் விநாடிக்கு 2,305 கன அடியாகவும், கேரளப் பகுதிக்கு விநாடிக்கு 1,014 கன அடியாகவும் இருந்தது. அணைப் பகுதியில் 6.4 மி.மீட்டர், தேக்கடி ஏரியில் 15.8 மி.மீ. மழையும் பெய்தது.

தீபாவளி பட்டாசு விபத்து: 10 நிமிஷங்களில் தீயணைப்புத் துறை செல்ல திட்டம்

சென்னை, நவ.2: தீபாவளியையொட்டி, பட்டாசுகளினால் ஏற்படும் தீ விபத்துகளை அணைக்க கிராமப்புறங்களில் சம்பவ இடத்துக்கு 20 நிமிஷங்களுக்குள் செல்லவும், நகர்புறங்களிலும் சம்பவ இடத்துக்கு 10 நிமிஷங்களுக்குள் செல்லவும் தீயணைப்புத் துறை தயாராகி வருகிறது. சென்னையில் 66 இடங்களில் புற தீயணைப்பு நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

இது குறித்த விவரம்:

தமிழக தீயணைப்புத்துறைக்கு மாநிலம் முழுவதும் 349 தீயணைப்பு நிலையங்கள், 3 மீட்பு நிலையங்கள் உள்ளன. இந்த நிலையங்களில் அதிகாரிகள், தீயணைப்பு வீரர்கள் என 7,600 பேர் பணியாற்றுகின்றனர்.

நவம்பர் 4-ஆம் தேதி கொண்டாடப்படும் தீபாவளி பண்டிகையின்போது பட்டாசுகளினால் ஏற்படும் தீ விபத்துகளை உடனடியாக அணைப்பதற்கு தீயணைப்புத்துறை திட்டமிட்டு, பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்து வருகிறது.

பட்டாசுகளினால் ஏற்படும் தீ விபத்துகள் ஆண்டுக்கு, ஆண்டு அதிகரித்து வருகின்றன. இருப்பினும் சில ஆண்டுகள் மழையின் தாக்கம் அதிகமாக இருந்தால், பட்டாசுகளினால் ஏற்படும் தீ விபத்துக்களின் எண்ணிக்கை வெகுவாக குறைந்துவிடுவதும் உண்டு.

மாநிலம் முழுவதும் கடந்தாண்டு தீபாவளியன்று சுமார் 111 தீ விபத்துகள் ஏற்படுள்ளன. பட்டாசுகளினால் ஏற்படும் தீ விபத்துகளினால் சேதத்தை குறைப்பதற்கு தீயணைப்புத்துறை பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துள்ளது. முக்கியமாக பட்டாசு விபத்து குறித்து தகவல் கிடைத்ததும், சம்பவ இடத்துக்கு கிராமப்பகுதிகளில் 20 நிமிஷத்துக்குள்ளும், நகர்ப்புறங்களில் 10 நிமிஷத்துக்குள்ளும் செல்வதற்கு தீயணைப்புத்துறையினர் திட்டமிட்டுள்ளனர்.

66 இடங்களில் புற தீயணைப்பு நிலையங்கள்

ஆண்டுகளும்... பட்டாசு விபத்துகளும்...
தமிழகத்தில் கடந்த 7 ஆண்டுகள் தீபாவளியன்று பட்டாசுகளினால் ஏற்பட்ட தீவிபத்துகள், ஆண்டுவாரியாக வழங்கப்பட்டுள்ளது.

ஆண்டு	சிறிய தீ விபத்து	நடுத்தர தீ விபத்து	மொத்தம்
2020	111	–	111
2019	165	5	170
2018	228	4	232
2017	44	–	166
2016	334	1	335
2015	43	–	84
2014	31	–	56

66 தீயணைப்பு நிலையங்கள்: இதற்காக சென்னையில் 49 தீயணைப்பு நிலையங்களை தவிர்த்து 66 இடங்களில் புற தீயணைப்பு நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. கடந்த ஆண்டுகளில் அதிகப்படியான தீ விபத்துகள் ஏற்பட்ட பகுதிகள், மக்கள் நெரிசல் மற்றும் தீ விபத்து ஏற்படுவதற்கு சாத்தியக்கூறுகள் அதிக இருக்கும் பகுதிகளில் ஆகிய இடங்களில் இந்த புற தீயணைப்பு நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

இந்த தீயணைப்பு நிலையங்களில் ஒரு தீயணைப்பு வாகனத்துடன் 24 மணி நேரமும் 15 தீயணைப்பு வீரர்கள் பணியில் இருப்பார்கள். இந்த தீயணைப்பு நிலையங்கள் தீபாவளிக்காக, செவ்வாய்க்கிழமை (நவ.2) முதல் செயல்படத் தொடங்கி 4 நாள்கள் செயல்பாட்டில் இருக்கும். இது தவிர சிறியதாக ஏற்படும் தீயை அணைக்கவும், பெரிய தீயணைப்பு வாகனங்கள் செல்ல முடியாத பகுதிகளுக்கு உடனடியாக சென்று அணைக்கவும் ஜீப் வடிவிலான நான்கு தீயணைப்பு வாகனங்களும், 8 தீயணைப்பு மோட்டார் சைக்கிள்களும் பயன்படுத்தப்படுகின்றன.

தீயை அணைப்பதற்கு தண்ணீர் விநியோகம் சீராக இருக்க வேண்டும் என்பதற்காக மெட்ரோ நிறுவனத்திடமிருந்து 50 தண்ணீர் லாரிகள் எப்போதும் தயார் நிலையில் வைக்கப்படுகின்றன. இந்த வாகனங்கள் தலா 4 ஆயிரம் லிட்டர் தண்ணீர் பிடிக்கும் அளவுக்கு கொள்ளளவு கொண்டவை ஆகும். சென்னையில் சுமார் ஆயிரம் தீயணைப்புப் படை வீரர்கள் பணியில் இருக்கும் நிலையில் கூடுதலாக 20 ஓட்டுநர்கள் உள்பட 200 தீயணைப்பு படை வீரர்கள் வெளிமாவட்டங்களில் இருந்து வரவழைக்கப்படுவதாக தீயணைப்புத்துறை உயர் அதிகாரி தெரிவித்தார்.

கட்டுப்பாட்டு அறை: தீ விபத்து குறித்து தகவல்களை பரிமாறி கொள்வதில் சிரமமும், காலதாமதமும் ஏற்படுவதை தவிர்ப்பதற்காக தீயணைப்புத் துறை, காவல்துறை, சுகாதாரத் துறை ஒருங்கிணைந்து செயல்படுகிறது. விபத்து குறித்து தகவல்கள் கிடைத்ததும், இத் துறையினர் தங்களுக்குள் பரிமாறிக் கொள்வதன் மூலம் சம்பவ இடத்தை சில நிமிஷங்களுக்குள் செல்ல தீயணைப்புத்துறை திட்டமிட்டுள்ளது.

இதன் ஒரு பகுதியாக சென்னை காவல்துறை கட்டுப்பாட்டு அறையில் 2 தீயணைப்பு படை வீரர்களும், அதேபோல தீயணைப்புத் துறை கட்டுப்பாட்டு அறையில் 2 காவலர்களும் பணியில் இருப்பார்கள். இவர்கள் மூலம் இரு துறைகளிடமும் தகவல்கள் உடனுக்குடன் தகவல் பரிமாறப்படும். அதேபோல அரசு பொதுமருத்துவமனையில் தீ விபத்தில் காயமடைந்தோர் பற்றிய தகவல்களை உடனடியாக பெற அனைத்து மருத்துவமனைகளிலும் தீயணைப்புப் படை வீரர்கள் இருவர் பணியில் இருப்பார்கள் என தீயணைப்புத்துறை உயர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

சம்பவ இடத்தை எவ்வளவு விரைவாக சென்றடைய முடியுமோ, அந்தளவுக்கு இழப்புகளை குறைக்க முடியும் என்பதால் தீயணைப்புத்துறையினர் இந்த ஏற்பாட்டினை செய்துள்ளார்கள்.

தமிழ்நாடு இல்லத்தின் உள்ளுறை ஆணையர் பதவி பெயர் மாற்றம்

புது தில்லி, நவ.2: தில்லி, தமிழ்நாடு இல்லத்தில் உள்ளுறை ஆணையர்களின் பதவி பெயர்களை மாற்றி தலைமைச் செயலர் வி.இறையன்பு திங்கள்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

தமிழ்நாடு இல்லத்தின் முதல் நிலை உள்ளுறை ஆணையர் ஜக்மோகன் சிங் ராஜு கூடுதல் தலைமைச் செயலர், முதன்மை உள்ளுறை ஆணையர் என்று அழைக்கப்படுவார். அதேபோல, இரண்டாம் நிலையில் இருந்த உள்ளுறை ஆணையர் ஆஷிஷ் சாட்டர்ஜி, தமிழ்நாடு இல்லத்தின் உள்ளுறை ஆணையர் என்று அழைக்கப்படுவார் என அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாஜக பெண் பொறுப்பாளர்களுக்கு எதிராக அவதூறு: திமுகவினர் மீது தேசிய மகளிர் ஆணையத்தில் புகார்

நமது சிறப்பு நிருபர்

புது தில்லி, நவ. 2: தமிழக பாஜக பெண் பொறுப்பாளர்களுக்கு எதிராக சமூக வலைத்தளங்களில் அவதூறு பரப்பப்படுவது, காவல் துறையினர் தாக்குவது உள்ளிட்டவை குறித்து ஆளும் திமுக அரசு நடவடிக்கை எடுக்காதது குறித்து தேசிய மகளிர் ஆணைய தலைவர் ரேகா சர்மாவிடம் தமிழக பாஜக சார்பில் செவ்வாய்க்கிழமை புகார் அளிக்கப்பட்டது.

இதுகுறித்து பாஜக மாநிலச் செயலாளர் சுமதி வெங்கடேசன், பாஜக கலை, கலாசாரப் பிரிவின் மாநிலத் தலைவர் காயத்ரி ரகுராம், மாநில செய்தி தொடர்பாளர் எஸ்.ஜி.சூர்யா ஆகியோர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

மதுரையைச் சேர்ந்த திமுக தகவல் தொழில்நுட்பப் பிரிவைச் சேர்ந்த ஜெயச்சந்திரன், பாஜகவின் கலை, கலாசாரப் பிரிவின் மாநில தலைவர் காயத்ரி ரகுராம் குறித்து அவதூறு பரப்பினார். இதுகுறித்து கடந்த அக்டோபர் 21-ஆம் தேதி புகார் அளிக்கப்பட்டதை அடுத்து, மறு நாள் திமுக அவரை கட்சியிலிருந்து நீக்கியது. ஆனால், காவல் துறை இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை.

இதேபோன்று, தருமபுரியைச் சேர்ந்த திமுக சமூக வலைத்தளப் பொறுப்பாளர் ஈஸ்வர், திமுகவைச் சேர்ந்த ராஜலிங்கம் ஆகியோரும் பாஜக பெண் தலைவர்களைக் குறிப்பிட்டு அவதூறு பரப்பும் வகையில் சமூக வலைத்தளங்களில் பதிவிட்டனர்.

இதற்கிடையே அண்மையில் கைது செய்யப்பட பாஜக மாநிலச் செயற்குழு உறுப்பினர் கல்யாணம் ராமனை சந்திக்கச் சென்ற பாஜக மாநிலச் செயலாளர் சுமதி வெங்கடேசன் காவல் துறையினரால் தாக்கப்பட்டார். இதுகுறித்து சென்னை காவல் ஆணையரிடம் புகார் அளிக்கப்பட்டும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதனால், தேசிய மகளிர் ஆணையத்திடம் புகார் அளித்துள்ளோம். இந்தப் புகார்கள் மீது நடவடிக்கை எடுப்பதாக ஆணைய தலைவர் ரேகா சர்மா உறுதியளித்துள்ளார் என்றனர்.

'பாதுகாப்பு நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்ளாததே பட்டாசு கடைகளின் விபத்துக்கு காரணம்'

உயர் நீதிமன்றத்தில் அரசு தகவல்

சென்னை. நவ.2: பட்டாசு கடைகளில் அவசர கால பாதுகாப்பு நடவடிக்கையை முறையாக மேற்கொள்ளாமல், வெடி பொருட்களை அலட்சியமாக கையாளுவதால் வெடி விபத்து சம்பவங்கள் நடைபெறுகின்றன என்று சென்னை உயர் நீதிமன்றத்தில் தமிழக அரசு தெரிவித்துள்ளது.

விழுப்புரம் மாவட்டம், சாலை அகரம் என்ற ஊரில் நித்யா என்பவர் உரிமம் பெற்று அமைத்துள்ள பட்டாசு கடையில், வெடிபொருள் துணை கட்டுப்பாட்டாளர், வட்டாட்சியர் ஆகியோர் ஆய்வு மேற்கொண்டனர். அப்போது, பாதுகாப்பு விதிகளை மீறி பட்டாசுகளை இருப்பு வைத்திருந்ததாகக்கூறி, பட்டாசு கடைக்கு கடந்த அக்டோபர் 28-ஆம் தேதி 'சீல்' வைத்தனர். இதை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் நித்யா வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கு நீதிபதி ஆர்.மகாதேவன் முன்பு விசாரணைக்கு வந்தது.

அப்போது மனுதாரர் தரப்பில் ஆஜரான வழக்குரைஞர் வி.ராகவாச்சாரி, மனுதாரர் அனைத்து உரிமங்களைப் பெற்று பட்டாசு கடை நடத்தியுள்ளார்.

அக்கடையின் முதல் மற்றும் 2-ஆவது தளங்களில் விதிமீறல் இருப்பதாகக்கூறி, கடைக்கு 'சீல்' வைத்துள்ளனர். தீபாவளி பண்டிகையை முன்னிட்டு சில நாட்கள் மட்டுமே பட்டாசுகள் விற்பனையாகும். வியாபாரம் நடைபெறும் நேரத்தில், அதிகாரிகள் இப்படி நடவடிக்கை எடுத்து வியாபாரத்தை முடக்கிவிட்டனர் என்றார்.

தமிழ்நாடு அரசு தரப்பில் ஆஜரான வழக்குரைஞர் ஸ்டாலின் அபிமன்யு, மனுதாரர் அவசர கால பாதுகாப்பு நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்ளவில்லை. அனுமதி பெறாமல் கட்டப்பட்ட இரு தளங்களில் வெடிபொருட்கள் இருப்பு வைக்கப்பட்டிருந்தது. பட்டாசு கடைகளில் வெடிபொருட்களை முறையாக கையாளாமல் அலட்சியமாக இருப்பதால்தான் கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் வெடிவிபத்து போன்ற சம்பவங்கள் நடைபெறுகின்றன என்றார்.

இதைப் பதிவு செய்த நீதிபதி ஆர்.மகாதேவன், தீபாவளி பண்டிகைக்கு இரு நாட்கள் மட்டுமே உள்ளதால், மனுதாரர் பிற்பகலுக்குள் (நவ.2) அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

தீபாவளி பண்டிகை நெருங்குவதைக் கருத்தில் கொண்டு, வட்டாட்சியர் மாலை நேரத்தில் ஆய்வு செய்ய வேண்டும். பாதுகாப்பை நடவடிக்கைகளை உறுதி செய்த பின்னர், மனுதாரரை பட்டாசு கடையை நடத்த அனுமதி வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டு, வழக்கை 9-ஆம்தேதிக்கு ஒத்திவைத்தார்.

ரூ.300 கோடி வரி ஏய்ப்பு செய்த கால்நடை தீவன நிறுவனம்: வருமானவரித் துறை விசாரணை

சென்னை, நவ.2: தமிழகத்தைச் சேர்ந்த கால்நடை தீவன நிறுவனம் ரூ.300 கோடி வரி ஏய்ப்பு செய்திருப்பது வருமானவரித் துறை சோதனையில் தெரியவந்துள்ளது.

இது குறித்த விவரம்:

ஈரோட்டை தலைமையிடமாக கொண்டு இயங்கும் கால்நடை தீவனங்கள், கோழி இறைச்சி, சமையல் எண்ணெய்கள், முட்டை உள்ளிட்ட பொருள்களை தயார் செய்யும் நிறுவனத்துக்குச் சொந்தமான தமிழகம், கர்நாடகம், கேரளம் மாநிலத்தில் உள்ள 40 இடங்களில் வருமானவரித்துறையினர் கடந்த மாதம் 27-ஆம் தேதி சோதனை நடத்தினர்.

பல நாள்கள் நடைபெற்ற இச்சோதனையில், முக்கிய ஆவணங்கள், மடிக்கணினி, பென்டிரைவ், ஹார்ட் டிஸ்க் உள்ளிட்ட பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

அவற்றை ஆய்வு செய்ததில் அந்த நிறுவனம், வருமானத்தை வெவ்வேறு வழிகளில் முதலீடு செய்ததும். விலைப்பட்டியல் மூலம் போலி கொள்முதலுக்காக செலவு செய்ததும் தெரியவந்துள்ளது. இதுபோன்று விற்பனை மற்றும் கணக்குப் புத்தகங்களில் செய்யப்பட்டுள்ள மாற்றங்கள் விசாரணை மூலம் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது.

ரூ.300 கோடி வரி ஏய்ப்பு: கைப்பற்றப்பட்ட ஆவணங்களைப் பகுப்பாய்வு செய்ததில், கணக்கில் வராத வருமானம் எவ்வாறு உருவாக்கப்பட்டுள்ளது என்பதும் தெரிய வந்திருக்கிறது. மேலும், கணக்கில் வராத வருமானம் மூலம் அசையா சொத்துக்கள் வாங்கப்பட்டிருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இந்த சோதனையில் கணக்கில் வராத ரூ. 3.3 கோடி பறிமுதல் செய்யப்பட்டு உள்ளது. அதோடு ரூ.300 கோடிக்கு வரி ஏய்ப்பு செய்திருப்பதும் வருமானவரித் துறைக்கு தெரியவந்து உள்ளது. இது தொடர்பாக வருமானவரித் துறை தொடர்ந்து விசாரணை செய்து வருகிறது.

நாம் தமிழர் சீமான் மீது வழக்கு

சேலம், நவ. 2: இறையாண்மைக்கு எதிராகப் பேசியது உள்ளிட்ட 5 பிரிவுகளின் கீழ் நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் மீது சேலம், அம்மாபேட்டை போலீஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

சேலம், அம்மாபேட்டையில் நாம் தமிழர் கட்சியின் நிகழ்ச்சி திங்கள்கிழமை நடைபெற்றது. இதில் அக்கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் கலந்துகொண்டு பேசினார். கூட்டத்தில் 300 பேர் கலந்து கொண்டனர். அந்தக் கூட்டத்தில் பங்கேற்றவர்கள் சானிடைஸர், முகக் கவசம் அணியாமல் இருப்பது உள்பட கரோனா பரவல் தடுப்பு நடவடிக்கைகளை பின்பற்றவில்லை எனத் தெரிகிறது. இதுகுறித்து கிராம நிர்வாக அலுவலர் ராஜா, அம்மாபேட்டை போலீஸில் புகார் அளித்தார்.

அதன்பேரில் இறையாண்மைக்கு எதிராகவும், மொழிவாரி மாநிலம் பிரிப்பது தொடர்பாகவும், வன்முறையைத் தூண்டும் வகையிலும் பேசியதாக சீமான் மற்றும் அக்கட்சியின் நிர்வாகிகள் மீது 5 பிரிவுகளின் கீழ் அம்மாபேட்டை காவல் ஆய்வாளர் கணேசன் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்.

தென்காசி மாவட்டம்: 4 தேக்கத்தில் இருந்து இன்று முதல் நீர் திறப்பு

சென்னை, நவ. 2: தென்காசி மாவட்டத்தில் உள்ள நான்கு நீர்த் தேக்கங்களில் இருந்து புதன்கிழமை (நவ. 3) முதல் நீர் திறந்து விடப்படும் என்று பொதுப்பணித் துறை அறிவித்துள்ளது. இதுகுறித்து, அந்தத் துறை செவ்வாய்க்கிழமை வெளியிட்ட அறிவிப்பு:-

தென்காசி மாவட்டத்திலுள்ள அடவிநயினார், கடனா நதி நீர்த் தேக்கங்கள், கருப்பா நதி, இராம நதி நீர்த் தேக்கங்களிலிருந்து பாசனத்துக்காக புதன்கிழமை முதல் தண்ணீர் திறந்து விடப்படும். அடுத்த ஆண்டு மார்ச் 30-ஆம் தேதி வரை தண்ணீர் திறக்கப்படும் என பொதுப்பணித் துறையின் அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

IDBI BANK
ஐடிபிஐ வங்கி லிமிடெட்
நெ.163, ஹரி நிவாஸ் டவர்ஸ், தம்பு செட்டி தெரு, பாரிமுனை, சென்னை 600001

ஐடிபிஐ வங்கி லிமிடெட் - தங்க நகைகள் ஏல அறிவிப்பு

ஐடிபிஐ வங்கி, பாரிமுனையில் கீழ்கண்ட விவரங்களின்படி தங்க நகைகளின் ஈட்டின் பேரில் கடன் பெற்றவர்கள் தாங்கள் பெற்ற கடன் தொகைகளை திருப்பி செலுத்தாத காரணத்தினால், கடன் தொகைகளை வசூலிக்கும் பொருட்டு, வங்கியில் அடமானம் வைக்கப்பட்ட நகைகளை பொது ஏலத்தில் விட முடிவெடுக்கப்பட்டுள்ளது. பொது ஏலம் 08.11.2021 அன்று மாலை 4.30 மணிக்கு, ஐடிபிஐ வங்கி, நெ.163, ஹரி நிவாஸ் டவர்ஸ், தம்பு செட்டி தெரு, பாரிமுனை, சென்னை600001 கிளை (Sol907) யில் நடைபெறும்.

வ. எண்	கணக்கு எண்	கடன் பெற்றவர் பெயர் மற்றும் முகவரி	அடகு வைக்கப்பட்ட தங்க நகைகளின் விவரம்	மொத்த எடை (கிராம்)	நிர்ணய விலை டெபாசிட் தொகை
1	0907671100015455	R. குகன் ராஜ், No-28, C G காலனி 5வது தெரு, இராயபுரம், சென்னை, தமிழ்நாடு -600013.	Chains - 2 Studs - 2	63.50	₹ 2,40,000.00 ₹ 24,000.00
2	0907671100015464		Chain-1 / Rings-4 Studs-4	40.60	₹ 1,60,000.00 ₹ 16,000.00

பொது ஏலம், வங்கி விதித்துள்ள விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டது. விருப்பமுள்ளவர்கள், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை, ஐடிபிஐ வங்கி, பாரிமுனை கிளையின் அறிவிப்பு பலகையில் 02.11.2021 முதல் 06.11.2021 வரை காட்சிப்படுத்தப்பட்டிருக்கும். ஏலத்தில் பங்கேற்பவர்கள், இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை முழுவதும் அறிந்தவராகக் கருதப்படுவர். ஏலக்கேட்பு தொகை சமர்பிக்க கடைசி தேதி: 06.11.2021 - மாலை 4.30 மணி வரை
தேதி : 02.11.2021, இடம் : சென்னை — அதிகாரப்பூர்வ அதிகாரி, ஐடிபிஐ வங்கி லிட்.

IDBI BANK

சென்னை, திருவான்மியூர் வங்கி அலுவலகத்திற்கு இடம் தேவை

வங்கி தனது அலுவலக செயல்பாடுகளுக்காக **சென்னை, திருவான்மியூரில் 2000 சதுரடி வரை** உள்ள இடத்தை நீண்ட கால குத்தகைக்கு எடுக்க விரும்புகிறது. பொருத்தமான இடத்தை வைத்திருக்கும் விருப்பமுள்ள நபர்கள் இந்த விளம்பரம் (பிரசுரித்த நாள் தவிர்த்து) வெளியான **10 நாட்களுக்குள்** பொது மேலாளர் மற்றும் பிராந்திய முதுநிலைத் தலைவர், (எண். 37, PM டவர்ஸ், கிரீம்ஸ் சாலை, சென்னை -600006) சென்னை மண்டல அலுவலகத்திற்கு விண்ணப்பிக்கவும். **நவம்பர் 15, 2021 (13, 14ம் தேதிகள் வங்கி விடுமுறை நாட்கள் தவிர) அன்று மாலை 6.00 மணிக்குள்** வந்து சேரும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும். விவரக்குறிப்பு மற்றும் இதர விவரங்களை எங்கள் வலைதளமான **www.idbibank.in** இல் அறிவிப்புகள் டெண்டர் பிரிவிலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் அல்லது எங்களின் ஏதாவது கிளையில் பெற்று கொள்ளலாம்.
சென்னை — Sd/
நவம்பர் 03, 2021 — தலைமை பொது மேலாளர் - சென்னை மண்டலம்

கடன் வசூல் தீர்ப்பாய நீதிமன்றம் -III, சென்னை
6வது தளம், கூடுதல் அலுவலக கட்டிடம், சாஸ்திரிபவன், ஹாடோஸ் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை - 600006

அசல் விண்ணப்ப எண். 73 of 2020
M/s.தமிழ்நாடு மெர்க்கன்டைல் பேங்க் லிமிடெட், சென்னை அம்பத்தூர் கிளை,
பிரதிநிதியாக அதன் கிளை மேலாளர் ...மனுதாரர்
-Vs-
1. திரு.D.முனிவேல், த/பெ.P.தேவராஜன், உரிமையாளர் M/s.R.K.R.பெப்ரிக் ஆண்டு இன்ஜினியரிங் மற்றும் ஒருவர் **... எதிர்மனுதாரர்கள்**

பெறுநர்
1. திரு.D.முனிவேல், த/பெ.P.தேவராஜன், உரிமையாளர் M/s.R.K.R.பெப்ரிக் ஆண்டு இன்ஜினியரிங்
எண்.825/5, அண்ணா சாலை, விஜயலட்சுமிபுரம், அம்பத்தூர், சென்னை - 600053.
மற்றும் மேலும் முகவரி : எண்.2, அனுகிரஹா அப்பார்ட்மெண்ட், 3வது தெரு, உதயா நகர், போரூர், சென்னை - 116.
2. திருமதி.L.அனிதா, க/பெ. திரு.D.முனிவேல்,
எண்.2, அனுகிரஹா அப்பார்ட்மெண்ட், 3வது தெரு, உதயா நகர், போரூர், சென்னை - 116.
மற்றும் மேலும் முகவரி : எண்.3, 9வது குறுக்கு தெரு, திருமலைபிரியா நகர், அம்பத்தூர், சென்னை - 53.

மாற்று சேவை மூலமாக எதிர்மனுதாரர்களுக்கு அழைப்பாணை

எதிர் மனுதாரர்களிடமிருந்து **ரூ.27,50,177.11/-** வசூலிப்பதற்காக மேற்குறிப்பிட்டுள்ள மனுதாரர் வங்கி இந்த தீர்ப்பாயத்தில் மேற்குறிப்பிட்ட O.A. எண்.73/2020 - ல் விண்ணப்பத்தை தாக்கல் செய்துள்ளார்.

எதிர்மனுதாரர்களுக்கு பொதுவான முறையில் அழைப்பாணையை / அறிவிப்பை வழங்க முடியாததாலும் மற்றும் மேற்குறிப்பிட்ட அசல் விண்ணப்பத்திற்கு மாற்றுமுறை அறிவிப்புக்கு மாண்புமிகு தீர்ப்பாயம் உத்தரவிட்டுள்ளது ஆகையால் எதிர்மனுதாரர்களுக்கு நாளிதழ் மூலமாக இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது.

எனவே எதிர்மனுதாரர்களான தாங்கள் நேரிலோ அல்லது முறையாக அறிவுறுத்தப்பட்ட வழக்குரைஞர் மூலமாகவோ இந்த தீர்ப்பாயத்தின் முன்பு **15.11.2021** அன்று அல்லது அதற்கு முன்பு **காலை 11.00 மணிக்கு** ஆஜராகி மற்றும் தங்களது ஆட்சேபனையை எழுத்து பூர்வமாக தெரிவிக்குமாறு கேட்டு கொள்ளப்படுகிறது. நிவாரணங்கள் ஏன் வழங்கப்பட கூடாது என்பதற்கான காரணங்களை காட்டுமாறு தங்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

தவறும்பட்சத்தில் மேற்குறிப்பிட்ட அசல் விண்ணப்பம் தாங்கள் இல்லாத நிலையிலும் சட்டத்தின் படி தீர்ப்பு அளிக்கப்படும் என்று இந்த அறிவிப்பு வழங்கப்படுகிறது.

2021-ம் வருடம், அக்டோபர் மாதம் 20 ஆம் நாள், இந்த தீர்ப்பாயத்தின் எனது கையொப்பம் மற்றும் முத்திரையின் கீழ் கொடுக்கப்பட்டுள்ளது.
ஒப்பம்
தீர்ப்பாயத்தின் முத்திரை — பதிவாளருடைய கையொப்பம்

வட கிழக்கு ரயில்வே — டெண்டர் அறிவிப்பு
மின்னஞ்சல்: cos@ner.railnet.gov.in இணையத்தளம்: www.ner.indianrailways.gov.in
தொலைநகல் எண்.: 0551-2200721
டெண்டர் அறிவிப்பு எண்: 13 நாள்: 01/11/2021
இ-கொள்முதல் முறையின் மூலம் டெண்டர்களுக்கு அழைப்பு

இந்தியக் குடியரசுத்தலைவர் சார்பில் பொருட்களுக்கான உயர் முதன்மை மேலாளர், வடகிழக்கு இரயில்வே, கோரக்பூர் அவர்கள் கீழ்க்காணும் பொருட்கள் வழங்கலுக்கான டெண்டர்களை இ-கொள்முதல் முறைப்படி வரவேற்கிறார். பொருட்களின் முழுமையான விவரமும் இன்ன பிற நெறிமுறைகளும் www.ireps.gov.in இணையத்தளத்தில் காணலாம்.

அயிட்டம் எண்.	டெண்டர் எண்	கடைசி நாள்	பண்டக சாலைகளின் சுருக்க விவரம்	கொள்முதலுக்கான அங்கீகார வழங்குநர்	தேவையான அளவு	டேவணித் தொகை (EMD) (ரூ.)
1	22211820A	25.11.2021	EP ஸ்விட்ச் மற்றும் மேக்னட் வால்வு முதலானவை	-	20 எண்ணிக்கை	53900/-
2	29211027A	26.11.2021	கவர் அசெம்பளி செட் EPM 143 MM முதலானவை	-	4590 செட்	225700/-
3	22211065A	29.11.2021	ரிப்பேர் கிட் ஸ்லாக் அட்ஜஸ்டர் முதலானவை	RDSO	1330 எண்ணிக்கை	117430/-
4	22210044A	29.11.2021	சிங்கிள் பீஸ் FRP லோயர் ஷட்டர் முதலானவை	-	6860 எண்ணிக்கை	149870/-
5	22210932	29.11.2021	FTIL-க்கான சப்போர்ட்டிங் டிவைஸ் முதலானவை	-	184 எண்ணிக்கை	108510/-
6	22200213	30.11.2021	ஆக்ஸில் பாக்ஸ் ஃபிரண்ட் கவர் முதலானவை	ICF	2188 எண்ணிக்கை	59110/-
7	29210107	30.11.2021	லோ மெயின்டனன்ஸ் லீ ஆசிட் 200 AH முதலானவை	RDSO	918 எண்ணிக்கை	95420/-
8	22211935A	30.11.2021	கம்போனட் ஸ்பேர் செட் முதலானவை	RDSO	33 செட்	-
9	30211050E	30.11.2021	மெயின்டனன்ஸ் ஃப்ரீ வால்வு ரெகுலேட்டட் லீட் ஆசிட் பேட்டரி முதலானவை	RDSO	271 செட்	530380/-
10	22201182	30.11.2021	பென்டு கப்லிங் லிங் மற்றும் டிரன்னியன் முதலானவை	RDSO	1018 எண்ணிக்கை	105650/-
11	22201703A	03.12.2021	டிஸ்ட்ரிபியூட்டர் வால்வ் அடாப்டர் முதலானவை சேர்த்து	RDSO	162 எண்ணிக்கை	71400/-
12	22210216	06.12.2021	ஆக்ஸில் பாக்ஸ் ரியர் கவர் முதலானவை	ICF	8475 எண்ணிக்கை	222110/-

CPRO/S-77 — பொருட்களுக்கான உயர் முதன்மை மேலாளர், கோரக்பூர்
பயணிகள் வசதிகள் குறித்து SMS-ல் புகார்கூற மொபைல் எண்: 09794845955
கூரையிலோ படிக்கட்டுகளிலோ ஒருபோதும் பயணம் செய்யாதீர்

Rane
ரானே ஹோல்டிங்ஸ் லிமிடெட்
பதிவு அலுவலகம்: "மைத்ரி", 132, கதீட்ரல் சாலை, சென்னை - 600086.
visit us at: www.ranegroup.com CIN: L35999TN1936PLC002202

செப்டம்பர் 30, 2021 முடிவடைந்த காலாண்டு மற்றும் அரையாண்டிற்கான ஒருங்கிணைந்த தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள்

ரூபாய் லட்சத்தில்

வ எண்	விபரங்கள்	30.09.2021 அன்றுடன் முடிந்த காலாண்டிற்கான (தணிக்கை செய்யப்படாத)	30.09.2020 அன்றுடன் முடிந்த காலாண்டிற்கான (தணிக்கை செய்யப்படாத)	30.09.2021 அன்றுடன் முடிந்த அரையாண்டிற்கான (தணிக்கை செய்யப்படாத)	30.09.2020 அன்றுடன் முடிந்த அரையாண்டிற்கான (தணிக்கை செய்யப்படாத)
1.	இயக்கத்திலிருந்து மொத்த வருமானம்	69,730	52,396	1,22,307	71,809
2.	இந்தக்காலத்திற்கான நிகர லாபம்/ (நஷ்டம்) (வரி மற்றும் விதிவிலக்கான இனங்களுக்கு முன்)	1,889	1,397	1,041	(9,214)
3.	இந்தக்காலத்திற்கான நிகர லாபம்/ (நஷ்டம்) வரிக்கு முன் (விதிவிலக்கான இனங்களுக்கு பின்)	2,713	1,316	4,672	(9,295)
4.	இந்தக்காலத்திற்கான மொத்த விரிவான வருமானநிகர லாபம்/ (நஷ்டம்) வரி மற்றும் விதிவிலக்கான இனங்களுக்கு பின்	1,653	469	3,727	(7,935)
5.	இந்தக்காலத்திற்கான மொத்த விரிவான வருமானம்/ (நஷ்டம்) (இந்தக்காலத்திற்கான உள்ளடக்கிய லாபம்/ (நஷ்டம்) (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம்/ (நஷ்டம்) (வரிக்கு பின்)	2,539	42	4,409	(8,559)
6.	பங்கு மூலதனம்	1,428	1,428	1,428	1,428
7.	பங்கு ஒன்றுக்கு வருமானம் (EPS) (முக பதிப்பு ரூ.10/- வீதம்) (தொகை ரூபாயில்) (வருடாந்திர காலண்டு காலமல்ல)				
	(அ) அடிப்படை:	10.54	2.92	23.26	(37.11)
	(ஆ) நீர்த்த மதிப்பு:	10.54	2.92	23.26	(37.11)

மேற்கூறியவை செபி (பட்டியல் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள், 2015-ன் விதிமுறை 33-ன் கீழ் பங்குச் சந்தைகளில் தாக்கல் செய்யப்பட்ட, காலாண்டு நிதி முடிவுகளின் விரிவான வடிவமைப்பிலிருந்து எடுக்கப்பட்டவை. நிதி முடிவுகளின் முழு வடிவம் பங்குச் சந்தை இணையதளங்களின் www.bseindia.com மற்றும் www.nseindia.com மற்றும் நிறுவனத்தின் இணையதளத்தில் www.ranegroup.com காணலாம்.

குறிப்புகள்:
1. மேலே உள்ள நிதி முடிவுகள் தணிக்கை குழுவால் மதிப்பாய்வு செய்யப்பட்டு, நவம்பர் 02, 2021 அன்று நடைபெற்ற கூட்டத்தில் இயக்குநர்கள் குழுவால் அங்கீகரிக்கப்பட்டது. இந்த நிதி முடிவுகளின் வரையறுக்கப்பட்ட ஆய்வு சட்டரீதியான தணிக்கையாளர்களால் மேற்கொள்ளப்பட்டது.
2. தொடர்பவை மேலே உள்ள நிதி முடிவுகளில் உள்ள விதிவிலக்கான உருப்படிகளின் பட்டியல்:
அ) குழுவின்துணை நிறுவனமான ரானே என்ஜின் வால்வ் லிமிடெட் ("REVL") விருப்ப ஓய்வூதியச் (வீஆர்எஸ்) செலவினமானது செப்டம்பர் 30, 2021 இல் முடிவடைந்த காலாண்டு மற்றும் அரையாண்டிருக்கு ரூ.90 லட்சம், செப்டம்பர் 30, 2020 இல் முடிவடைந்த காலாண்டு மற்றும் அரை அரையாண்டிருக்கு ரூ.81 லட்சம் மற்றும் ரூ.173 லட்சம் மார்ச் 31, 2021 உடன் முடிவடைந்த ஆண்டிற்கானதாகும். மேலும் நிலம் விற்பனையின் மூலம் ரூ.2,396 லட்சம் லாபம் REVL மார்ச் 31, 2021 இல் முடிவடைந்த ஆண்டில் ஈட்டியுள்ளது.
ஆ) நிறுவனத்தின் அமெரிக்காவில் உள்ள துணை நிறுவனமான ரானே லைட் மெட்டல் காஸ்டிங்ஸ் இன்க்., (எல்எம்சிஐ) கோவிட் - 19 தொற்றுநோயின் தாக்கத்தை நிர்வகிப்பதற்காக அமெரிக்க அரசால் வழங்கப்பட்ட சில பொருளாதார நிவாரணங்களுக்கு உரிமை பெற்றுள்ளது. இத்தகைய பொருளாதார நிவாரணத் திட்டங்களின்படி, ஜூன் 30, 2021-ல் முடிவடைந்த காலாண்டிலும், செப்டம்பர் 30, 2021-ல் முடிவடைந்த அரை வருடத்திலும் எல்எம்சிஐ U.S Small Business Administration அளித்த USD 2.63 மில்லியன் (INR 1945 லட்சம்) Paycheck protection program loan (PPP கடன்)மன்னிக்க ஒப்புதல் பெற்றது. மேலும் எல்எம்சிஐ செப்டம்பர் 30, 2021 உடன் முடிவடைந்த அரை வருடத்தில் அமெரிக்க உள்நாட்டு வருவாய் சேவையிலிருந்து ஊழியர் தக்கவைப்பு கடன் (ERC) USD 2.40 மில்லியன் (INR 1776 லட்சம்) (USD 1.23 மில்லியன் (INR 914 லட்சம்) மற்றும் ஜூன் 30, 2021 முடிவடைந்த காலாண்டில் 1.17 மில்லியன் (INR 862 லட்சம்)க்கு தகுதி பெற்றது. ஜூன் 30, 2021-ல் முடிவடைந்த காலாண்டு மற்றும் செப்டம்பர் 30, 2021 முடிவடைந்த காலாண்டு மற்றும் அரை வருடத்திற்கான ஒருங்கிணைந்த முடிவுகளில் இத்தகைய நிவாரணங்களின் மொத்த அளவு விதிவிலக்கான வருமானமாக பதிவு செய்யப்பட்டுள்ளது.
3. கோவிட் - 19 தொற்றுநோய் வெடித்ததன் விளைவாகவும் இந்திய அரசாங்கம் அறிவித்த பொதுமுடக்கம் காரணத்தினால் ஜூன் 30, 2020 உடன் முடிந்த காலாண்டில் நிறுவனத்தின் குழு செயல்பாடுகள் நிறுத்தப்பட்டன. ஆகையால் செப்டம்பர் 30, 2021 உடன் முடிவடைந்த அரை வருடத்தின் புள்ளிவிவரங்கள் செப்டம்பர் 30, 2020 உடன் முடிவடைந்த அரை வருடத்துடன் ஒப்பிட முடியாது.
4. முக்கிய நிதித் தகவல்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன

ரூபாய் லட்சத்தில்

வ எண்	விபரங்கள்	30.09.2021 அன்றுடன் முடிந்த காலாண்டிற்கான (தணிக்கை செய்யப்படாத)	30.09.2020 அன்றுடன் முடிந்த காலாண்டிற்கான (தணிக்கை செய்யப்படாத)	30.09.2021 அன்றுடன் முடிந்த அரையாண்டிற்கான (தணிக்கை செய்யப்படாத)	30.09.2020 அன்றுடன் முடிந்த அரையாண்டிற்கான (தணிக்கை செய்யப்படாத)
1.	மொத்த வருவாய்	3,353	2,202	4,960	3,115
2.	வரிக்கு முன் லாபம்	2,269	1,391	2,836	1,452
3.	வரிக்கு பின் லாபம்	1,714	1,140	2,180	1,188
4.	மற்ற விரிவான வருமானம்	306	(137)	941	(132)
5.	மொத்த விரிவான வருமானம்	2,020	1,003	3,121	1,056

இடம்: சென்னை
தேதி: நவம்பர் 2, 2021
ரானே ஹோல்டிங்ஸ் லிமிடெடிற்காக
எல் கணேஷ், தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர்